வடக்கு மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல: **09/2021**

எனது இல : **NP/07/10/04/56**
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*16.04.2021*

பிரதம செயலாளர்,
ஆளுநரின் செயலாளர்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – *2019(2020)***

**1.** வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் **2021,ஜுலை** மாதம் நடாத்தப்படும்.

**2.** இப்பரீட்சை கீழ் குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்படும் நகரங்கள் மற்றும் அதற்குரிய நகர இலக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **நகரம்** | **நகர இலக்கம்** |
|---|---|
| கொழும்பு | *01* |
| கண்டி | *02* |
| பதுளை | *03* |
| மாத்தறை | *04* |
| யாழ்ப்பாணம் | *05* |

மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் நிலையம் ஒன்றுக்கான எண்ணிக்கை போதியளவானதாகக் காணப்படாதுவிடின் மேற்படி பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு மேற்படி விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள். விண்ணப்பிக்கும் நகரத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**3.** இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைவாக அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**4.** வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்திற்கான *31.03.2021*இல் உள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை *19* ஆகும். நிரப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை, அதிசிறப்பு தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறமை அடிப்படையில் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையில் முதலில் நடைபெறும் போட்டிப் பரீட்சையின் இறுதித் திகதிக்கு கணிக்கப்படும். அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை, குறித்த பரீட்சையின் இறுதித்திகதிக்குப் பின்னர் மீண்டும் பகிரங்க அறிவித்தலொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறு பகிரங்கப்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மீண்டும் திருத்தியமைக்கப்படமாட்டாது. அத்திகதிக்குரிய வெற்றிடங்களில் *50%* நியமனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைவதற்காக குறித்த ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் *40* புள்ளிகளைப் பெற வேண்டும். தகைமையுடைய விண்ணப்பதாரிகள் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழுவொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும். நேர்முகப்பரீட்சை விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களைப் பரீட்சிப்பதற்காக மாத்திரம் அமைவதோடு அதற்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

**5.** பொது நிர்வாகச் சுற்றறிக்கை *2016.02.25* ஆந் திகதிய மற்றும் இலக்கம் *03/2016* இன் MN-07-2016 சம்பளத் தொகுதி இப்பதவிக்கு உரித்தாவதுடன் அதற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,580 – 11 X 755 – 10x 1080 – ரூபா 68,425 ஆகும்.

**6. பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள்.-**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு (**10.05.2021**) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் *01/2020* இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிராத இணைந்த சேவைக்குரிய,

(அ) மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் **I** இல் உள்ள அலுவலராக இருத்தல்.

**அல்லது**

(ஆ) குறைந்தபட்சம் சேவையில் *08* வருடங்களுக்குக் குறையாத முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் II இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல்,

**அல்லது**

(இ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்று மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் *05* வருட முனைப்புடனான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தராயிருத்தல்.

**மற்றும்**

(ஈ) உரிய திகதியில் குறித்த வினைத்திறன் காண்தடைப் பரீட்சையை முழுமையாக நிறைவுபடுத்தியிருத்தல்.

**குறிப்பு (i):**

மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தற்போதுள்ள தரத்திற்கு ஏற்ப மேற்படி (அ),(ஆ),(இ) இன் மூலம் காட்டப்பட்டுள்ள முனைப்புடனான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தற்போதுள்ள தரத்திற்குரியதாக சித்தியெய்த வேண்டிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய முழுமைப்படுத்தப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கையினுள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சித்தியெய்தியுள்ள ஆனால் நிர்வாக காரணங்களின் அடிப்படையில் குறித்த வினைத்திறன்காண் சலுகை தாமதமடைந்துள்ளதன் காரணமாக சேவையில் நிரந்தரம் செய்தல் அல்லது பதவியுயர்துதல் அல்லது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு இழக்கப்படுவதன் காரணமாக மாத்திரம் திருப்திகரமான சேவைக்காலத்தை முழுமைப்படுத்துவதற்கு முடியாமற் போன உத்தியோகத்தர்களும், இப்பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**குறிப்பு (ii):**

எனினும், அவ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கோ பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுவது பதவியுயர்வினைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையாகாது என்பதுடன், அதி சிறப்பு தரத்திற்கு பதவியுயர்த்தப்படும் கடிதம் வழங்கப்படுவது உரிய வகையில மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாக திருப்திப்பட்டு குறித்த நிரந்தரப்படுதலை/ பதவியுயர்வினை பெற்றதன் பின்னராகும்.

**7. விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி 25.5 செ. மீ. x 21 செ. மீ. (A4) அளவிலான தாளில் விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்தல் வேண்டும். *01* முதல் *05* வரையான இலக்கங்கள் முதலாம் பக்கத்திலும், *06* தொடக்கம் *09* வரையான இலக்கங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய இலக்கங்கள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். (பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும்.)

(ஆ) **நிறுவனத் தலைவரின் சான்றுபடுத்தல்:**

விண்ணப்பதாரிகளால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் அதன் நிழற்படப் பிரதியொன்றுடன் தமது திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தலைவரின் பரிந்துரையை பெற்றுக் கொண்டதன் பின்னர் நிழற்படப் பிரதியை சுயவிபரக் கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் மூலப்பிரதி தமது திணைக்களத் தலைவர் ஊடாக **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், 393/48, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக **2021.05.05** ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரால் அனுப்பப்படுகின்ற விண்ணப்பப் படிவத்திற்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவத்தின் வேறு எதுவித விண்ணப்பப்படிவங்களின் பிரதிகளையும் தனிப்பட்ட வகையில் அனுப்பிவைத்தலாகாது. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் சகல வகையிலும் முழுமைபடுத்தப்பட்டது என திணைக்களத் தலைவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதோடு விண்ணப்பத்திலுள்ள 14 ஆவது உறுதியுரையிலும் கையொப்பமிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கோ அல்லது அத்திணைக்களத்தின் வேறு அலுவலருக்கோ அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்புதலாகாது. விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்பு தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2019(2020)"** என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் போதுள்ள விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

(இ) (i) முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. முதற் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரிகளெனக் கருதப்படுவது பொது எழுதுவினைஞர் சேவையில் விசேட தரத்துக்கு 1980, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988, 1989, 1991, 1996, 1999 அல்லது 2001 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1985 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட அரச தட்டெழுத்தாளர் சேவையின் விசேட தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1996 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச சுருக்கெழுத்தாளர் சேவையின் விசேட தரத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மற்றும் 1999 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரச புத்தக கட்டுநர் சேவையின் / அரச சிறாப்பர் சேவையின் அல்லது அரச களஞ்சியப் பொறுப்பாளர் சேவையின் விசேட தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு மற்றும் 2006, 2007, 2011, 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரர்கள் மட்டுமே ஆவர்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா. 600/= ஆகும். இக்கட்டணத்தை எம்மால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி ***(2021.05.05)*** அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்** அவர்களின் **3401** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது அத்துடன் இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனளிக்கும்.

(ஈ) முழுமையுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அல்லது அதனுடன் தொடர்பான ஓர் ஆவணம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ அல்லது தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதிவரை விண்ணப்பம் தாமதப்படுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகள் ஆவர்.

(உ) விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

**8. பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரியமுறையில் விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து உரிய திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் பரீட்சை தினத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை ஒன்றைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும், பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

(இ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உங்களிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியிருப்பின் அதன் பிரதியும் தங்களது முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பனவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் மேற்படி விபரங்களுடனான ஒரு கோரிக்கைக் கடிதம் மற்றும் அனுமதி அட்டை அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் என்பவற்றை தொலைநகல் ஊடாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் பயனளிக்கக்கூடும்.

**குறிப்பு:** பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டவர் எனக் கருதப்படமாட்டாது.

**9. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.-**

பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

**10. பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.-

(அ) இப்பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் அளித்துள்ள தகவல்கள் பிழையானவை என பிற்காலத்தில் தெரியவந்தால் அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் மேலும் ஒரு நியமனம் பெறுவதற்காக கவனத்திற் கொள்ளப்படாததுடன் இப்பரீட்சை காரணமாக வழங்கப்பட்டுள்ள ஒரு நியமனத்தை இல்லாதொழிக்கவும் அல்லது பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

**11. பரீட்சை மொழி ஊடகம்.**

இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் சேவைக்கு சேர்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**12. பரீட்சைத் திட்டம்.-** எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்:-

| **வினாத்தாள்** | **காலம்** | **மொத்தப் புள்ளிகள்** |
|---|---|---|
| 1. அலுவலக முகாமை | 02 மணித்தியாலங்கள் | 100 |
| 2. அலுவலக முறைமைகள் | 02 மணித்தியாலங்கள் | 100 |
| 3. தாபன செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 |
| 4. அரச நிதி முகாமை | 02 மணித்தியாலங்கள் | 100 |
| 5. பொது வினாத்தாள் | 1 ½ மணித்தியாலங்கள் | 100 |
| | | **500** |

***13. பாடத்திட்டம்***: *பரீட்சார்த்திகளிடமிருந்து பின்வரும் பாடங்கள் பற்றிய அறிவு எதிர்பார்க்கப்படுகிறது.*

I. ***அலுவலக முகாமை*** *(காலம் 02 மணித்தியாலயங்கள், புள்ளிகள் -100)*

*ஒழுங்குக் கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு தொடர்பான அடிப்படைகள், பணிப் பகுப்பாய்வு, பணி மதிப்பீடு, தலைமைத்துவம், மேற்பார்வை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல், தொடர்பாடல், மக்கள் தொடர்பு, ஒருங்கிணைப்பும் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு.*

II. ***அலுவலக முறைமைகள்*** *(காலம் 02 மணித்தியாலயங்கள், புள்ளிகள் -100)*

*அலுவலக முறைமைகள் பற்றிய அடிப்படைகள், அலுவலக நடைமுறைகள், ஆவணங்கள் மற்றும் கோவைப்படுத்தல், மாதிரிப் படிவங்களை திட்டமிடல், கடிதங்களைப் பரிமாறுதல், அலுவலக உபகரணங்களின் பயன்பாடு பற்றிய கட்டுப்பாடு, அலுவலக தளக்கோலம் மற்றும் சுற்றுப்புறம், தொழில் விபரம், பணி ஆய்வு மற்றும் முறைமை ஆய்வு, பணி அளவீடு, அலுவலகச் செயற்பாட்டுக் கைநூல்.*

III. **தாபன செயற்பாடுகள் மற்றும் செயலொழுங்கு விதிகள்** *(காலம் 02 மணித்தியாலயங்கள், புள்ளிகள் -100)*

*அரச சேவைக்கு ஆட்சேர்க்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், அரச அலுவலர்களின் தாபனச் செயற்பாடுகள், தனிப்பட்ட கோவைகளின் பராமரிப்பு, அரச ஊழியர்களை நியமனம் செய்தல், இடமாற்றம், தரவுயர்வு வழங்கல், சேவையை முடிவுறுத்தல் ஆகிய பணிகளுக்கான அதிகாரங்களை ஒப்படைத்தல், நலனோம்பல், அரசாங்க அலுவலர்களுக்கு உரித்தான சிறப்புரிமைகள், தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தினால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள் தொடர்பான பொதுவான தெளிவு பரீட்சிக்கப்படும்.*

IV. ***அரச நிதி முகாமை*** *(காலம் 02 மணித்தியாலயங்கள், புள்ளிகள் -100)*

*வருடாந்த மதிப்பீடுகளையும் கணக்கீடுகளையும் சமர்ப்பிக்கும் ஒருவரின் பொறுப்புக்கள், நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்களை ஒப்படைத்தல், நிதியினைப் பொறுப்பேற்றல், கணக்குப்பதிவும் மீளப்பெறுதலும், செலுத்தல்கள், அரச நிதிப் பொறுப்பு, முற்பணம் மற்றும் வங்கிக் கணக்குகள், வழங்கல்களும் சேவைகளும், பெறுகைச் செயற்பாடுகள், பொருட்தொகை மதிப்பீடு, கணக்காய்வு விசாரணைகள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் பேரேடுகள், வருமான செலவுச் சுருக்கம், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டுப் புத்தகங்கள், அரச நிதிப் பயன்பாடு தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பொதுவான அறிவு பரீட்சிக்கப்படும்.*

V. **பொது வினாத்தாள்** *(காலம் 1 ½ மணித்தியாலயங்கள், புள்ளிகள் -100)*

*அரசாங்க நிர்வாகத்தின் இயல்புகள், அரசாங்க நிர்வாகத்தின் கட்டமைப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளும் புதிய அரச மறுசீரமைப்பு, அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மனித உரிமைகள் ஆணைக்குழு, குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்), பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழு, அலுவலக கலாசாரம், தொழில்சார் ஒழுக்கங்களும் நல்லொழுக்கங்களும், அலுவலகத்திலுள்ள பௌதிக வளங்களைச் சிறந்த முறையில் வடிவமைத்தலும் ஊழியர் குழாத்தின் நலனோம்பல் செயற்பாடுகளும், பதவி அந்தஸ்து மற்றும் சிவில் அந்தஸ்து தொடர்பாக சமூக விஞ்ஞான ரீதியான அங்கீகாரம், சேவை பெறுநர்களுக்கு அரசாங்க அலுவலர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்.*

***14. நியமனத்திற்காக தெரிவுசெய்தல்.-***

(i) *இப்பரீட்சையில் சித்தியெய்தி நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைப்பதற்காக ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம்* ***40*** *புள்ளிகள் என்ற விகிதத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப தயாரிக்கப்படும் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப விண்ணப்பதாரிகளின் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அந்நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தேர்ந்தெடுக்கப்படுகின்ற பரீட்சார்த்திகள் வெற்றிடங்கள் நிலவும், வடமாகாணத்தின் எப்பிரதேசத்திலேனும் அமைந்துள்ள அலுவலகமொன்றில் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும். இணைப்புச் செய்யப்படும் அலுவலகத்தில் நியமனத்தை ஏற்க மறுத்தால் அவரின் நியமனத்தை இரத்துச்செய்து அடுத்ததாக தகைமையுடையவர்களை ஒழுங்கு வரிசையாக அழைத்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.*

(ii) *முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற நிலையத்தில் குறைந்தபட்சம் 3 வருடம் கட்டாய சேவையில் ஈடுபடுதல் வேண்டும். எவ்வாறு இருந்தபோதிலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதாவது விசேட காரணத்தினால் அக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு அலுவலரை இடமாற்றம் செய்வதற்கு அவசியப்படுமாயின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.*

(iii) எழுத்துப் பரீட்சையின் மூலம் தகைமையினைப் பெற்றுக்கொள்பவர்களின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பிரகாரம், செயலாளர், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்குமுரிய பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

***15.*** வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பின் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டதும் ஏதேனும் திருத்தத்திற்கும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தத்திற்கும் அமைய நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

***16.*** குறிப்பிட்ட வெற்றிட எண்ணிக்கையை அல்லது ஏதேனும் வெற்றிடத்தினை நிரப்பாது விடுவதனைத் தீர்மானிப்பதற்கும் அத்துடன் இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயத்தினை நிர்ணயிப்பது தொடர்பில் செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளின் அல்லது வர்த்தமானிப் பத்திரிகையின் அடிப்படையில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

***17.*** இவ் அறிவித்தலில் தமிழ் மற்றும் சிங்கள மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**"அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் *2223* இலக்க *2021.04.09* ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை தழுவியதாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது"**

**சி.திருவாகரன்**
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*16.04.2021*